1973 டிசம்பர் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உறுப்பினர் கூறுவது போன்ற யோசனையை இந்த ஆய்வுக் குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களை அச்சுறுத்தி அவர்கள் பயப்படுகிற அளவிற்கு ஆளாக்காமல் கவர்ச்சிகரமாக பாடங்களை மாற்றி, மேற்படி ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிற முறையில் அக்கறை காட்ட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இலவச உடை, பாடக் கருவிகள், மற்றவைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மதிய உணவைப் பொறுத்த வரையில், மதிய உணவை மூன்றில் ஒரு பகுதியினர் பெறுகிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் மூன்றும் வகுப்பு வரையிலும் கரும் பலகைகள், பாடப் புத்தகங்கள், ஆங்கிலம், தமிழ், கணக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட இதற்காக 18 லட்ச ரூபாய் செலவாகிறது. அப்படியிருந்தும் கூட இன்னும் இந்த விகிதத்தைக் குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

Mauryan Pottery.

*171. THIRU N. WILSON APPOLLOS (on behalf of THIRU S. VELLAPANDIAN) :—Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Mauryan Pottery has been unearthed at Korkai on the banks of River Thambaraparani recently ;

(*b*) if so, the details thereof ?

மௌரியர் காலத்திய மட்பாண்டம்.

திரு என். வில்சன் அப்பலோஸ் (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மௌரியர் காலத்தைச் சேர்ந்த மட்பாண்டம் கொற்கையில் தாமிரவருணி ஆற்றுக்கரையில் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கொற்கையில் அகழ்வாய்வு செய்தபோது ஒரு மௌரியப் பானை ஓடு கண்டுபிடிக்கப்பட்டது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, தற்காலம் இருந்து வருகின்ற மண் பானைக்கும் கண்டுபிடிக்கப்பட்ட பானைக்கும் என்ன வித்தியாசம் ? அவைகள் மௌரிய காலத்துப் பானைகள்தான் என்பதற்கு அறிகுறிகள் ஏதாவது உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 டிசம்பர் 1

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கொற்கை பாண்டிய மன்னர் காலத்தில் தலைநகரமாக இருந்துவந்த ஒரு பழம் பெரும் நகரமாகும். இதைப்பற்றி சங்க இலக்கியங்களின் மூலமும் அறிந்துகொள்ளலாம். நாம் அதனுடைய வரலாற்றுச் சிறப்பைக் கருதி 1968–69–ஆம் ஆண்டில் ஒரு முறையும், 1971–72–ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாகவும் அகழ்வாய்வு செய்தோம். அந்த வகையில் சில பல முதுமக்கள் தாழிகள், மண் பாண்டங்கள், வளையல் துண்டுகள், சங்குகள், பானை ஓடுகள் முதலியவை கிடைத்திருக்கின்றன. சிகப்பு, கறுப்பு நிறமுள்ள வழவழப்பான பானை ஓடுகளும், வண்ணம் பூசிய பானை ஓடுகளும் மிகுதியாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. வடநாட்டிலிருந்த பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களான மகதம், ராஜகிரிகம், வைசாலி, பாடலிபுத்திரம், கௌசாம்பியம் முதலிய நகரங்களை அகழ்வாய்வு செய்தபோது கிடைக்கப்பெற்ற பொருள்களோடு ஒத்திருக்கின்ற காரணத்தினால் அவ்வாறு கூற இடமிருக்கிறது. கௌசாம்பியில் கண்டுபிடிக்கப்பட்ட ஓட்டின் காலம் கி.மு. 500 என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தக்ஷண சீலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஓட்டின் காலம் கி.மு. 400 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நாம் இரண்டு முறை கொற்கையில் அகழ்வாய்வு செய்தபோது, சில கரித்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டு அவைகளை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் அவை கி.மு. 785–ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே கி.மு. 785–லிருந்து கொற்கையில் மக்கள் வசிக்கத் தொடங்கினர் என்று அறிய முடிகிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, சாதாரணமாக இந்த மண் பானைகள் சந்திரகுப்த மௌரியர் காலத்துப் பானைகளாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. அவர்கள் பாடலிபுத்திரம்— தற்போது பாட்னா என்று அழைக்கப்படும் இடத்திலிருந்துதான் ஆண்டார்கள் என்று தெரிகிறது. ஒருகால் இங்கேயிருந்து, தமிழ் நாட்டு நாகரீகம் அங்கே சென்றிருக்கிறதா அல்லது அங்கேயிருந்து இங்கே வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவை எல்லாம் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்க வேண்டிய விஷயங்கள். இப்பொழுது தெரிந்துள்ள வரையில் மகதம், ராஜகிரிகம், வைசாலி போன்ற நகரங்களோடு கொற்கையும் சேர்ந்திருக்கிறது, தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைக் காண்கிறோம். இந்தக் கொற்கையை "கரோய் நாடு" என்று தாலமி குறிப்பிட்டிருக்கிறார். கொல்சிக் வளைகுடாவில் முத்துக்குளித்த இடத்தை ஸோரிஸ கௌரை என்று குறிப்பிட்டார்கள் என்றும், கொற்கை வாணிபத்தில் சிறந்த மையமாகவும், சோலன் ஆற்றுக்கு முகத்துவாரமாகவிருந்தது என்றும் பெரிபிளஸின் நூலில் காணப்படுகிறது. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு முத்துக் குளிப்பு நடந்ததாகக் கருதப்படுகிறது. அது முத்துக்குளிப்பதற்கு ஒரு முக்கிய நகரமாக இருந்தது. ஒரு தலைநகரிலிருந்து இன்னொரு நகரத்திற்கு தொடர்பு ஏற்படுவதற்கு முயற்சி நடந்திருக்கிறது என்று தெரிகிறது. எங்கிருந்து எங்கே நாகரீகம் சென்றது என்று இதன் மூலம் கூறுவதற்கில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அங்கு கண்டுபிடிக்கப் பட்ட பானைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது கறுப்பு—சிகப்பு போடப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனுல் அந்தச் சின்னம் திராவிட நாடு தனியாக இருந்து மௌரிய நாட்டோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைக் காட்டுகிறதா ? இரண்டு நாடுகளுக்கும் ஏதோ தொடர்பு இருந்திருக்கிறது. அந்தக் காலத்தி லேயே கருப்பு—சிகப்பு ஒரு நாட்டுச் சின்னமாக இருந்திருக்கிறதா என்பதை அரசு ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டிய ஆராய்ச்சிகள். கறுப்பு சிகப்பு நம் வீட்டுப் பானைகளிலே கூட பார்க்கலாம். மிக அதிகமாக சூடு ஏறினுல் கறுப்பு நிறம் வரும். அதிகமாகச் சூடு ஏறுவிட்டால் சிகப்பு நிறம் வரும். அங்கே கண்டுபிடிக்கப்பட்ட பானைகளில் சில ஸ்வஸ்டிகா போன்ற வடிவிலும், திரிசூலம், சூரியன் போன்ற வடிவிலும் இருக்கின்றன.

Post-Graduate Examination in Tamil.

172. * THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state : —

(*a*) whether there is any proposal with the Government to make provision for the professors with post-graduate qualification in Science to appear for the Post-graduate examination in Tamil without involving any loss in emoluments or break in service ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறிவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள், தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக்குப் பயில விரும்பினுல் ஊதியம்—பணி இழப்பில்லாமல் பயில அரசு வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS